நாள்: 19.08.2025
O.S. No. 64/2018
**பெயர்: சௌந்தராஜன் த/பெ. கோவித்ராசு**
**வா.சா.1**

பிரதி**வாதி தரப்பு குறுக்கு விசாரணை :-**

வழக்கு ஆ-பட்டியல் சொத்து தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதென்றால் சரியல்ல. வழக்கு ஆ பட்டியல் சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் பொருத்து பட்டா தவிற வேறு ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது தகப்பனார் பெயருடன் இப்ராஹிம் என்பவர் பெயரும் குறிப்பிட்டு கூட்டு பட்டாவாக வழங்கப்பட்டுள்ளதென்றால் சரிதான். புல எண்.275/7 ல் எனக்கு மட்டும் எவ்வளவு பாத்தியம் உள்ளது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது வீட்டிற்கு அடுத்து மேற்காக பிரதிவாதியின் வீடு உள்ளதென்றாலும், இருவரின் வீடும் வடக்கு பார்த்த வாசல் வீடு என்றாலும் சரிதான். என் வீட்டின் மேல்புற தாய் சுவரும் பிரதிவாதியின் கீழ் புற தாய் சுவரும் ஒட்டியுள்ளதென்றால் சரிதான். இரண்டு வீட்டிற்கும் இடையில் எந்த காலத்திலும் இடைவெளி இருந்ததில்லை என்றால் சரிதான். எனது வீடு கூறை வீடு என்றாலும் பிரதிவாதியின் வீடு ஓட்டு வீடு என்றாலும் சரிதான். என் வீட்டின் கூறை சேதமாகாமல் இருப்பதற்காக நீல நிற தார்பாய் போட்டு மூடியுள்ளேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் எங்கள் இருவரின் வீடும் உள்ளதென்றால் சரிதான். அந்த புகைப்படம் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகைப்படத்தில் பிரதிவாதியின் வீட்டு சுவரும் என் வீட்டு சுவரும் தனித்தனி சுவராக இருந்து இரண்டு சுவர்களும் ஒட்டியுள்ளது தெரிகிறது என்றால் சரிதான். பிரதிவாதி அந்த புகைப்படத்திலுள்ள அவரது வீட்டு சுவற்றிற்கு வடக்கு புறத்தில் கட்டிடம் கட்ட முயற்சி செய்தார் என்றால் சரிதான். என் வீட்டு சுவருக்கு மேற்கு பக்கம் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. புகைப்படத்திற்கு பின்புறம் ஒரு RCC வீடு உள்ளதென்றாலும் அது பஷீர் என்பவரது கட்டிடம் என்றாலும் சரிதான். என் வீட்டின் கீழ் புற சுவற்றிற்கு கிழக்கே என் தோட்டம் உள்ளதென்றால் சரிதான். என் வீட்டிற்கு கிழக்கால் சுயம்புநாத சுவாமியின் நந்தவனம் இல்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்கள் தவறானவை என்றால் சரியல்ல. என் வீட்டு மின் இணைப்பு பிரதிவாதியின் வீட்டு வாசலை கடந்து அவர் வீட்டிற்கு குறுக்கா மின் கம்பிகள் இணைக்கப்பபட்டிருந்தது என்றால் சரிதான். அவ்வாறு மின் கம்பிகள் அவரது வீட்டிற்கு குறுக்காக இருப்பதால் அவரது வீட்டிற்கு நேராக மின் கம்பம் வைத்து இணைப்பு பெற சொன்னார் என்றாலும் வேறு எதுவும் கேட்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் எனது கூறை வீட்டை மேற்கு புறம் கீற்று வாரி சார்பை நீட்டினேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் இடத்தில் நான் கட்டுமானங்கள் எழுப்ப அனுமதியில்லை என்றால் சரிதான். அ-பட்டியல் சொத்தில் பிரதிவாதிகள் அவருக்கு சொந்தமான இடத்தில் கட்டியுள்ள கட்டிடத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை

என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு தெற்கு பக்கம் உள்ளம் காலி மனை எனக்கு சொந்தம் என்று பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும், இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

M S
BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.08.19 09:42:52 +0530